TAMIL NADU LEGISLATURE LIBRARY
1 - OCT 1971
MADRAS

தமிழ் நாடு சட்டப் பேரவை

சனிக்கிழமை, 1970 மார்ச் 21.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Pilot project in medical Research

* 469. *Q*.—THIRU K. SAHADEVA KANDER : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether there are proposals under the consideration of the Government to open a pilot project in medicinal Research in Madras Medical College, Madras City?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவ இரசாயன ஆராய்ச்சி முன்னோடித் திட்டம் ஒன்றைத் தொடங்க ஒப்பளிப்பு வழங்கப் பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம் : தலைவர் அவர்களே, இந்த மருத்துவத் துறையில் ஆராய்ச்சி என்றால், அது எந்த பிரிவைக் கொண்டு செய்யப்படும் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இங்கே மாநிலக் கல்லூரியிலும், மற்றும் பல்வேறு இடங்களிலும் 'பாட்டனி' துறையிலும் 'கெமிஸ்ட்ரி' துறையிலும் பல ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன. அங்கே நடைபெறுகின்ற ஆராய்ச்சிக்கும் மருத்துவக் கல்லூரியில் நடைபெறும் ஆராய்ச்சிக்கும் தொடர்பு இல்லாமலிருக்கிறது. டிபார்ட்மென்ட் ஆஃப் பாட்டனி, டிபார்ட்மென்ட் ஆஃப் கெமிஸ்ட்ரி இருக்கின்றன. 'டிபார்ட்மென்ட் ஆஃப் பார்மகாலஜி அண்டு ரிசர்ச் ஸெல்' மெடிகல் காலேஜில் இருக்கிறது. அவைகளுக்குள்ளே ஒரு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுவதற்காகவும், இங்கேயிருக்கின்ற நம்முடைய நாட்டு மருந்துகளினுடைய தரங்களை ஆராய்வதன் மூலமாக, அதிலே சில நன்மை ஏற்படக்கூடும் என்பதற்காக அதை 'அனலைஸ்' செய்வதற்கும், தரத்தைப் பிரித்துப் பார்த்துப் பயன்படுத்த வேண்டும் என்றும் ப்ரொஃபொஸர் ஆஃப் பாட்டனி, ப்ரொஃபொஸர் ஆஃப் கெமிஸ்ட்ரி, ப்ரொஃபொஸர் ஆஃப் பார்மகாலஜி ஆகியவர்களையெல்லாம் போட்டு, ப்ரொஃபொஸர் ஆஃப் மெடிஸினாக இருக்கிற டாக்டர் ஆர். எஸ். சுப்பிரமணியம் அவர்களை அமைப்பாளராக வைத்து இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இது 23—12—1969-இலிருந்து செயல்படத் தொடங்கியது.

திரு. நா. வீராசாமி : சென்னை மருத்துவக் கல்லூரியில் மருத்துவ இராசயன ஆராய்ச்சி முன்னோடித் திட்டம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு இருப்பதாகச் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தில் எம்.டி. (டாக்டர் ஆஃப் மெடிஸின்) என்கிற டிக்ரிக்கான பயிற்சியைத் துவக்கிய நேரத்தில், எம்.டி. (செஸ்ட்) என்ற துறை இல்லாமலிருக்கிறது. மற்ற மாநிலங்களில் அப்படிப்பட்ட கல்வி சொல்லித் தரப்படுகிறது. இருதயக் கோளாறைப் பற்றிப் படித்து, அதிலே ஸ்பெஷலைஸ் பண்ணுவதற்கான படிப்பு நம்முடைய மருத்துவக் கல்லூரியில் இல்லை. ஆகவே, இந்த மருந்தைத் தயாரிக்கும் முன்னோடித் திட்டத்தில் எம்.டி. (செஸ்ட்) என்ற பிரிவை ஏற்படுத்தி, முன்னோடித் திட்டத்தில் இதுவும் சேர்த்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது மருந்து ஆராய்ச்சி பற்றியது, நோய் ஆராய்ச்சி பற்றியது அல்ல.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒரு புதிய ஆராய்ச்சித் துறை—மருந்து ஆராய்ச்சித் துறைக்கான அடிப்படைக் காரணத்தை நான் சொன்னேன். பல்வேறு ஆராய்ச்சிகள் செய்கின்ற நிலையங்களோடு தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதுதான் நோக்கம். 'இண்டிஜினஸ் மெடிஸின்' என்று சொல்லப்படுகிற நாட்டு மருந்துகளின் தரங்களை ஆராய்ந்து பார்ப்பதற்காக இது ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எம்.டி. (செஸ்ட்) என்று தனியாகத் துறையொன்றை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியத்தை மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டார்கள். அதுபற்றிய குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால், அதற்கான அவசியம் இருக்கிறதா, இப்பொழுதிருக்கும் வேறுபல துறைகளே அந்தத் தேவையை நிறைவேற்றுகின்ற அளவிலே அமைந்திருக்கின்றனவா என்று ஆராய்ந்து சொல்லப்படும்.

Jaundice cases treated in Madura Erskine Hospital.

* 470 Q.—Dr. H. V. HANDE : Will the Hon the Minister for Education and Health be pleased to state—

(*a*) the total number of 'Jaundice' cases treated both as in-patients and out-patients in the Madurai Erskine Hospital between January to April 1969 ; and

(*b*) the number of fatalities, month war?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :

(அ) சனவரி, 1969-இல்	25
பிப்ரவரி, 1969-இல்	16
மார்ச்சு, 1969-இல்	18
ஏப்ரல், 1969-இல்	24
	83